1992 செப்டம்பர் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதியை விட்டு நீங்கள் போய்க் கொண்டு இருந்தீர்கள் என்றால் என்ன அர்த்தம்? Under Rule 110, there shall be no debate on such statement at the time it is made. இதைத் தவிர வேறு எந்த விதி இருக்கிறது? (குறுக்கீடு) இந்த விதியை மீறி நீங்கள் அத்துமீறிப் போகிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள் அத்துமீறிச் செல்லுகிறீர்கள். நீங்கள் அத்துமீறிச் செல்லுகிறீர்கள். விதி 110-ஐ மீறி நீங்கள் பேசுவது தவறு.

திரு. ச. இராமச்சந்திரன் : இது சப்-ஜூடிஸ்,......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருங்கள், சப்-ஜூடிஸ் என்றால் நீங்கள் வேறு வகையிலேதான் கிளப்ப வேண்டும். விதி 110-ன்கீழ் அறிக்கை வைக்கிறபோது நீங்கள் இத்தகைய குறுக்கீடுகளைச் செய்வது அத்துமீறிய செயல் என்பதைத் தங்களுக்குக் கண்டனமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : இது சப்-ஜூடிஸ்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நீங்கள் வேறு வகையிலேதான் கிளப்பவேண்டும். 'At the time it is made—there shall be no debate' என்று வருகிறபோது (குறுக்கீடு) நீங்கள் எவ்வளவு நாள் சட்டமன்ற உறுப்பினராக இருந்து என்ன பயன்? (குறுக்கீடு).

திரு. ச. இராமச்சந்திரன் : Can you allow this? It is sub-judice.

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விதியை விட்டு விட்டு பேசும்போது என்ன செய்வது? (குறுக்கீடு) தயவுசெய்து நீங்கள் இந்த விதியைப் பார்த்துவிட்டுப் பேச வேண்டும். (குறுக்கீடு). பொதுவான சட்டம்—ஒழுங்கு பற்றிய ஒரு அறிக்கையை அவைக்கு அளிக்க அரசாங்கம் விரும்புகிறபோது அவைத் தலைவர் அனுமதி அளிக்கிறேன். அவைத் தலைவர் அனுமதி அளித்த ஒரு பிரச்சினையை சப்-ஜூடிஸ் என்கிற வகையில் பேசுவதற்கு எந்த வகையிலும் உங்களுக்கு விதியில் இடம் இல்லை.

8. ஒழுங்குப் பிரச்சினை;

பதவிப் பிரமாணத்தின்போது எடுத்துக் கொண்ட உறுதிமொழிக்கு மாறாக "சுய நிர்ணய உரிமை" பற்றிப் பேசுவது குறித்து.

[1992 செப்டம்பர் 21

திரு. பி. வி. இராஜேந்திரன் : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனி, உட்காருங்கள்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினராக அமர்ந்திருக்கிற ஒவ்வொருவரும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஆர்டிகள் 188-படி Oath or Affirmation எடுத்துத்தான் அமர்ந்திருக்கிறோம். அரசியல் அமைப்புச் சட்டத்தின் மீது முழு நம்பிக்கையும் வைத்திருக்கிறோம். இறையாண்மையிலும் ஒற்றுமையிலும் முழு நம்பிக்கை வைத்துத்தான் அமர்ந்திருக்கிறோம். அதற்கு விரோதமாக "Right to self-determination, என்று கூறி, சுய நிர்ணய உரிமை வேண்டும் என்று (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே விவாதம் இல்லை. அதைத் தான் அவரிடம் கேட்டேன். அவருக்கு விதி 110-ன்கீழ் அனுமதி இல்லையென்கிறேன். அவர் வேறு ஏதோ பேசுகிறேன் என்கிறார். கேட்டுவிட்டு நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

திரு. பி.வி. இராஜேந்திரன்: தலைவர் அவர்களே, "Righ to self-determination" சுயநிர்ணய உரிமை என்பது...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒழுங்குப் பிரச்சினையாக வராது. இதுபற்றி என்னிடம் எழுதிக்கொடுங்கள். (குறுக்கீடு) இல்லை, ஒரு உறுப்பினர், தான் எடுத்த உறுதி மொழிக்குப் புறம்பாக நடந்து கொள்கிறார் என்று நீங்கள் கருதினால் அதுபற்றி என்னிடத்திலே கொடுங்கள். அது இதிலே வராது. அது பாயின்ட் ஆப் ஆர்டர் என்று வராது. அதை என்னிடத்தில் எழுதிக்கொடுத்தால் அதன்மீது நான் நடவடிக்கை எடுக்கிறேன். (குறுக்கீடு) அவையினுடைய ஒழுங்குப் பிரச்சினையாக இது வராது. உட்காருங்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே எடுத்து தெரிவித்தது இன்றைக்கிருக்கிற அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை இந்த அவைக்கும், நாட்டுக்கும் தெரிவிக்க வேண்டும் என்பதற்காகவும், மத்திய அரசினுடைய சட்டம், மத்திய அரசினுடைய அறிக்கைகள் பற்றியும், மாநில அரசு எடுத்துக் கொண்டிருக்கிற நடிவடிக்கைகள் என்ன என்பதற்காகவும் அவர்கள் விளக்கினார் களே தவிர, அதுபற்றிய தீர்ப்பு எதையும் முதல்வர் அவர்கள்

வழங்கவில்லை. அது மட்டுமல்லாமல், இந்தச் சட்டத்தைப் பொறுத்து, மத்திய அரசாங்கத்தினுடைய நோக்கத்தைப் பொறுத்து, இந்த அரசு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. என்ன நோக்கத்தைக் கொண்டிருக்கிறது. என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தான் தெளிவாகத் தெரிவித்தார்கள் தீர்ப்பு எதுவும் தெரிவிக்கவில்லை.

5. அறிவிப்புகள் — தொடர்ச்சி.

(அ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1992 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

9. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.